Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (11 - 03 - 1991) திங்கட்கிழமை ஓசை 21

## கண் நோயாளர்கள் சிகிச்சைபெற இடையூறுகள்

(கொழும்புத்துறை)

யாழ் போதனா வைத்தியசாலையின் கண்சிகிச்சை பிரிவில் வெளிநோயாளர் சிகிச்சைபெறுவதற்குப் பல விதமான இடையூறுகள் ஏற்பட்டுவருவதாகப் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர். வாரத்தில் இரு தடவைகள் மட்டுமே வெளிநோயாளர்களுக்கு வைத்திய நிபுணர்களின் சிகிச்சையளிக்கப்பட்டுவருகின்றது. வைத்திய நிபுணர்களிடம் காண்பிப்பதற்கு 20 (4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை மாவட்டத்தில் இருவேறு சம்பவங்களில்

# 4 ஊர்காவற் படை உட்பட

# 15 படையினர் பலி

## புலிகளால் பல ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் நிகழ்ந்த இரு வெவ்வேறு சம்பவங்களில் நான்கு முஸ்லிம் ஊர்காவற் படையினர் உட்பட பதினைந்து சிறிலங்கா ஆயுதப்படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து பலரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல்கள் இரண்டும் நேற்றுக்காலை திரியாய், தோப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்றன. இவ்விரு தாக்குதல் சம்பவங்களிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்பட்டதாகத் தகவல் எதுவுமில்லை.

## நான்கு ஊர்காவற்படை உட்பட 11 ஆயுதப்படையினர் பலி!

(தோப்பூர்)

தோப்பூர் இராணுவ முகாமிலிருந்து, தெய்வநகர் என்னும் இடத்தினை நோக்கி ரோந்து சென்ற வேளையில் தோப்பூர் முகாமிலிருந்து சுமார் 500யார் தொலைவில் வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: ஏழு இராணுவத்தினரும் நான்கு முஸ்லிம் ஊர்காவற்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ 303 ரக துப்பாக்கிகள் - 4
ரவைகள் - 100

(4ஆம் பக்கம் பார்க்க)

## திரியாயில் 4 இராணுவம் பலி; பல ரக ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திரியாய் கிராமத்திலிருக்கும் இராணுவ முகாமிலிருந்து திரியாய் சந்தியை நோக்கி மூன்று பிரிவுகளாக ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி. 81 ரக துப்பாக்கி 1
★ ரவைக் கூடுகள் 4
★ ரி. 56-2 ரக துப்பாக்கி 1

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமகன் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள தாண்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலால் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தாண்டிக்குளம் முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் மோகன் என்ற பொதுமகனே கொல்லப்பட்டவர் ஆவார். (மு)

## ஈராக்கில் உள்நாட்டுச் சண்டை

(பாக்தாத்)

தெற்கு ஈராக்கில் குருடிஷ் இனத்தவர்களுக்கும், சதாம் ஹுசைனுக்கு ஆதரவான படைகளுக்கும் இடையேகடும் சண்டை நடப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப்பகுதியில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சேதவிபரம் தெரியவில்லை.

## பலமான ஷெல் தாக்கு

(நெல்லிப்பளை)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முழுவதும் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஷெல்கள் கீரிமலையை அண்டிய குவாறிப் பகுதிகளிலேயே வீழ்ந்து வெடித்தன. ஆயினும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை

(ச); (செ. த. மை)

★

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு தொடக்கம் ஆட்லறி ஷெல்கள் பொதுமக்கள் குடியிருப்புகளைநோக்கி ஏவப்பட்டன.

இத் தாக்குதலினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

## ரஞ்சனின் இறுதி நடவடிக்கை வவுனியாவில் சிவில் நிர்வாகம்?

(கொழும்பு)

காலஞ்சென்ற ரஞ்சன் விஜேரட்னாவின் கடைசி நடவடிக்கை வவுனியாமாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்துவது குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு அறிக்கை சமர்ப்பித்ததாகும்.

இதைத்தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை அமுல்செய்ய (4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு மைல் சுற்றுக்குள்ளேயே குண்டு தயாரிக்கப்பட்டதாம்

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவைக் கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு, சம்பவம் நடைபெற்ற ஹவ்லொக் வீதியைச் சுற்றியுள்ள சுமார் ஒருமைல் சுற்றுப்புறப் பகுதியிலேயே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அதி சக்திவாய்ந்த இந்தப் பாரிய வெடிகுண்டை தூரத்தில் இருந்து கொண்டு வந்திருக்க முடியாது என்றும் சம்பவம் நடந்த இடத்திற்கு அண்மையில் வைத்தே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## ரஞ்சனின் மரணம் பற்றி நடுநிலை விசாரணை வேண்டும்

- சிறிமாவோ

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா கொல்லப்பட்டது குறித்து நடுநிலையான விசாரணை நடாத்தவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

பொலிஸ் புலன் விசாரணையில் இதுவரை எந்தவொரு முடிவும் தெரியப்படுத்தப்படவில்லை என்பதால் நடுநிலையான விசாரணைகள் நடாத்தப்படவேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இவருக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பைத் தெரிவித்துள்ளன.

## ஆறு வடபகுதி இளைஞர்கள் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களுடன் டென்மார்க் செல்ல முயன்ற ஆறு வடபகுதி தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் டென்மார்க் செல்ல முயன்ற இவர்கள் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்கள்.

## காவல் அரண் அமைக்க முயன்ற படைமீது சினைப்பர்த்தாக்குதல்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமிற்கு அருகே காவலரண் அமைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்றுக் காலை 7. 45 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து சற்று முன்பாக வந்து காவலரண் அமைக்க முயன்ற இராணுவத்தினர்மீது புலிகள் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டனர். மீண்டும் 8 45 மணி (4ஆம் பக்கம் பார்க்க)

## வானொலி நிலையத்தின் முன் தி. மு. க. ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழகத்தில் தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் பாரபட்சமாக செயற்படுகின்றன என்பதை ஆட்சேபித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்றுக்காலை இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்திய தி. மு. க உறுப்பினர்கள் தொலைக்காட்சி நிலைய மருகேயும், வானொலி நிலையமருகேயும் சென்று கூக்குரல் எழுப்பினர்.

## அரபு - இஸ்ரேல் பிரச்சினை; பி. எல். ஓ. உடன் பேச்சு இல்லை

- ஜோர்ஜ் புஷ்

அரபு-இஸ்ரேல் பிரச்சினை தொடர்பாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அரபுலக செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ் புஷ் வளைகுடாப்பேரில் ஈராக்கை ஆதரித்ததன் மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தனது பெயரை களங்கப்படுத்தி விட்டது என்றும் தெரிவித்தார்.

வளைகுடாப்போரின் அடிப்படையில் மேற்காசியாவில் அமைதி நிபந்தனைகளை அமெரிக்கா விதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்

## சம்பள அதிகரிப்பிற்கு நடவடிக்கை

ஆசிரியர்பயிலுனருக்குவழங்கப்படும் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற் (4ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

### தவறி விட்டது

க. பத்மநாதன் ஆகிய எனது மக்கள் வங்கி பாதுகாப்பு ஊழியருக்கான அடையாள அட்டை (இல. 26355) பூநகரிக்கும் கரடிப்போக்கிற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. பத்மநாதன், மக்கள் வங்கி, கிளிநொச்சி

(R-1170)

ஏழாலை மத்தியைச்சேர்ந்த கதிர்த்தம்பி சிவநாயகம் ஆகிய நான் எனது தேசிய அடையாள அட்டையையும் (இல 560263449 V) மற்றும் வாகன பஸ் ஒன்றையும் கடந்த 25-2-91 திங்கட்கிழமை பூநகரி ஆலடிப்பகுதியிலும் சங்குப்பிட்டித் துறைக்கும் இடையே தவறவிட்டு விட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் அலுவலகத்தில் அல்லது மெயின் ரோட், சேர்ஸ் சாவகச்சேரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(B-2125)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் S ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(R-1153)

### தேவை

சப்பரவான வெற்று அரைடப்பேத்தல்கள். மிக்கவைற் - யாழ்ப்பாணம்.

(B-2124)

### மூளைக்காய்ச்சலால் மரணம்

(செ. தமை.)

மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட ஆவரங்காலைச் சேர்ந்த ஒருவர் சொழும்புத்துறை சென்றிருந்த சமயம் அங்கு மரணமானார்

# மண்ணை நேசிப்போர்

நாங்கள்
இந்த மண்ணில்
இந்த நாட்டில்
இருக்க ....
விரும்புகிறோம்.

பொச்சரும் செலியும்
கொன்று குவித்த
அப்பாவி மக்களின்
உடல்களை கடந்து...

எங்கள் மண்ணை
எங்கள் நாட்டை
மீட்கும் போரில்
எங்களுக்காகவே தங்களை
தந்து......
மரணித்த வீரர்கள்
சிந்திய குருதி
உறைய முன்னரே,

அன்னிய மண்ணின்
விமான நிலையத்தில்
அகதியாய் இறங்கிய
கூட்டத் தொடரில்
எங்களை தேடாதீர்

— மைப்

# வங்கி எதுவும் இல்லாத முல்லைத்தீவு மாவட்டம்

(முல்லைத்தீவு)

வங்கிகள் எதுவும் செயற்படாமல் அரசாங்க நிர்வாகம் நடைபெறும் ஒரேயொரு மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டமாகும்

கடந்த ஆண்டு ஜூனில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் செயற்பட்டன. மாங்குளத்திலும் இரு வங்கிகளுக்கும் கிளைகள் இருந்தன.

முல்லைத்தீவு மக்கள் வங்கி புதுக்குடியிருப்புக்கு மாற்றப்பட்டது. 1990 டிசம்பருக்குப் பிறகு புதுக்குடியிருப்பு மக்கள் வங்கியும் மூடப்பட்டது

மாங்குளம் வங்கிக் கிளைகளும் வான் தாக்குதலால் அழிக்கப்பட்டன இலங்கையில் வங்கிகளின் செயற்பாடு இல்லாது இருக்கும் ஒரேயொரு நிர்வாக மாவட்டம் முல்லைத்தீவாகும் வங்கிகள் இல்லாமையினால் விவசாயிகளின தும், மீனவர்களினதும் பொருளாதார நடவடிக்கை இந்த மாவட்டத்தில் முடங்கிப்போயுள்ளது

# வவுனியா மாவட்டத்தில் கால்நடைகளுக்கு நோய்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளது

வவுனியாவில் அரசபடையினரின் நடவடிக்கைகள் காரணமாக கால்நடை வளர்ப்போர் மிருக வைத்திய அதிகாரிகளை அணுகி கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள நோயை மாற்ற முடியாமல் திண்டாடுவதை அவதானிக்க முடிகிறது.

வவுனியா மிருகவைத்திய சாலை அலுவலகம் செயற்படுகின்ற போதிலும், கிராமப்புறங்களுக்குச் சென்று வளர்ப்பு மிருகங்களை கண்காணிப்பதற்குரிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்று இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

(தி)

# கடற்படையால் குடும்பங்கள் நயினாதீவில வெளியேற்றம்

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினர் அங்கிருந்து மூன்று குடும்பங்களை வெளியேற்றியுள்ளனர். படையினர் பிரஸ்தாப குடும்பத்தினரை அடிக்கடி தேடிச்சென்று அவர்களை சுட்டுக்கொல்லப் போவதாக மிரட்டியதுடன் அக்குடும்பத்தினரை பலமாகத் தாக்கியுமுள்ளனர்.

நயினாதீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெகநாதன் என்பவரின் குடும்பம் உட்பட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தொருபேர் இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் ஜெகநாதன் என்பவர் படையினரால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(22)

### எண்ணையின்றி பயிர்கள் நாசம்

வடமராட்சி, நவக்கிரி, புத்தூர், சிறுப்பிட்டி, வசாவிளான், அச்சுவேலி, பத்தைமேனி, கோப்பாய், இருபாலை போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்டு வரும் விவசாயப் பயிர்ச்செய்கைக்கு நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு மண்ணெண்ணெய் கிடைக்காததனால் பயிர்கள் அழிந்து போகும் நிலையிலுள்ளன

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் மிகவும் மனக்கவலை அடைந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

(24)

### தமிழ்ப் பத்திரிகை இல்லை

ஏயர் லங்கா விமானத்தில் பயணம் செய்வோர்க்கு வாசிப்பதற்காகக் கொடுக்கப்படும் தினசரிகளில் தமிழ்த் தினசரிகள் இடம்பெறுவதில்லை என புகார்கள் தெரிவிக்கின்றன.

### ஒய்வூதிய வேலைகள் பரவலாக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

காலி, மாத்தறை, கம்பஹா போன்ற மாவட்டங்களில் ஓய்வூதியத் திணைக்களத்தின் வேலைகள் பரவலாக்கப்பட்டது போல் யாழ் மாவட்டத்திலும் வேலைகள் பரவலாக்கப்படவேண்டும் என நல்லூர் ஓய்வூதிய சங்கம் கோரியுள்ளது.

வடபகுதியிலேயே கணிசமான அளவு ஓய்வூதியர்கள் இருக்கின்றனர் என்றும், அத்துடன் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வூதியம் பெற விரும்புவோரும் வடபகுதியிலேயே அதிகம் உள்ளனர் என்றும் நல்லூர் ஓய்வூதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே வடபகுதிக்கான ஓய்வூதிய வேலைகள் பரவலாக்கப்படவேண்டும் எனவும் அச்சங்கம் கேட்டுள்ளது.

### நூல்களை வழங்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழகம் தனது நூலகத்தை விஸ்தரிக்கும் பொருட்டு பொதுமக்களிடம் அறிவு சார்ந்த நூல்களை அன்பளிப்பாக தந்துதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

அரசியல் பொருளாதார சமூக இலக்கியம் தொடர்பான அனைத்து புத்தகங்கள் இந்த நூலகத்துக்கு தேவை என மறுமலர்ச்சிக் கழகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வரலாறு

எமது கல்லூரியின் வரலாற்றினை ஆராய்ந்து தீர்மானிப்பதற்கு யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களின் தலைமையில் அறிஞர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் இம்மாத இறுதியளவில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை அலுவலகத்தில் இந்தக் கல்லூரியின் வரலாறு சம்பந்தமாக கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூற விரும்புவோரைச் சந்திக்கவுள்ளனர்.

இக்குழுவினர் தமது ஆராய்ச்சிகளை மேற்கொள்ள, இந்துவுடன் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெரும் உதவியாக இருக்கும். ஆகவே இவ்விடயத்தில் ஆர்வம் கொண்டோர் தயவு செய்து இன்றிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் எழுத்து மூலம் திரு. சுந்தரம் டிவகலாலா (செயலாளர், பழைய மாணவர் சங்கம்) அவர்களுடன் கல்லூரியில் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| சுந்தரம் டிவகலாலா | அ. சி. குகதாசன், |
| செயலாளர், | நூற்றாண்டு விழாக் குழுத் |
| யாழ் இ. க. பழைய | தலைவரும், |
| மாணவர் சங்கமும் | அதிபரும். |
| மேற்படி குழுவும். | யாழ். இ. கல்லூரி. |

(B-2123)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இராசையா

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசையா 10. 03. 1991 ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பருவதம் ஆகியோரின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், மாதுங்கர் செல்லமுத்துவின் அன்பு மருமகனுமாவார். அன்னாரது பூதவுடல் இன்று 11. 03. 1991) திங்கட்கிழமை காலை 10 - 00 மணிக்கு, புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குரு

(R 1171)



# நினைவு தருகின்றோம்

## மார்ச் 11

1986ஆம் ஆண்டு தணுக்காயில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது ஒரே கைக்குண்டை வெடிக்கவைத்து வீரமரணமெய்திய

ரஞ்சன் (ச. சத்தியசீலன் - வவனிக்குளம்)

ஜீவா (க. கெங்காதரன் - செட்டிகுளம்)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

யோகேஸ் (பி. மனோகரன் - பெரியபுல்லுமலை)

1989ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட

சோமநாதன் ஏரம்பமூர்த்தி

(அப்பாறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆயுதம் ஏந்தியே
நாம் தாயகம் மீட்டிட
எதிரிகள்
பாசறையதுவே
அவர்கள்
கல்லறையாக்கும்
இன்று ஒரு சந்ததி
இப்படியாகலாம்
இனி வரும் சந்ததி
ஈழத்து மண்ணினை ஆளும்.

(எஸ். கமலநாதனின் 'தாயகம் மீட்போம்' என்ற கவிதையில் இருந்து)

— விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-2116)

**சிந்தனைக்கு**

கொள்கைக்காக நமக்கு மிகப்பிரியமானவர்களின் அதிருப்தியையும் ஏற்றுக் கொள்ள நாம் சித்தமாயிருக்க வேண்டும்.

— மகாத்மா காந்தி


ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 11-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05


# பிரதமர் வழங்காததை ஜனாதிபதி வழங்கினார்

மத்திய அமைச்சரவையின் தலைவராகத் தொடர்ந்தும் இருந்து பிரதமர் அலுவலகத்துடன் இணைந்த பணிகளையும், பாராளுமன்றப் பணிகளையும் நிறைவேற்றுமாறு இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் பிரதமர் பதவியை சில தினங்களுக்கு முன்னர் இராஜினாமாச் செய்த சந்திரசேகரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை சந்திரசேகர் தமது பதவியை இராஜினாமாச் செய்தபோது இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் அடுத்தகட்ட முடிவு அறிவிக்கப்படும் எனக் கூறிய ஜனாதிபதி வெங்கட்ராமன் ஏறத்தாழ எழுபத்திரெண்டு மணித்தியாலங்களின் பின்னர் இவ்வாறானதொரு முடிவை அறிவித்துள்ளார். இந்த முடிவு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இந்திய ஜனாதிபதி சட்டத்துறை வல்லுனர்களையும், அரசியல் சாசன நிபுணர்களையும் கலந்தாலோசித்த பின்னர் இம்முடிவு அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், ஜனாதிபதி வெங்கட்ராமன் இம்முடிவை எடுப்பதற்கு எடுத்துக்கொண்ட காலமும், அவர் முன்னர் அறிவித்ததற்கு மாறாக நடந்துகொண்டதும் எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துவதுபோல் உள்ளது.

பதவியில் இருந்து இராஜினாமாச் செய்த பிரதமர் சந்திரசேகர் வெளிப்படையாகவே தேர்தல் வைக்குமாறு கோரியுள்ளார். அதேபோன்று தமது கட்சிக்கு ஆட்சி அமைக்கும் யோசனை இல்லை என்றும், இடைக்காலத் தேர்தலில் போட்டியிடும் எண்ணமே உள்ளது என்றும் ஜனாதிபதியிடம் தாம் கூறிவிட்டதாக பாராளுமன்றத்தில் கூடுதலான ஆசனங்களைக் கொண்ட கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார். மேலும் பாரதீய ஜனதா கட்சியும், இடதுசாரிகளும் இடைக்காலத் தேர்தலை நடத்தக் கோரியிருந்தும் ஜனாதிபதி வெங்கட்ராமன் ஏன் இடைக்காலத் தேர்தலுக்கு உத்தரவிடவில்லை.

சந்திரசேகர் ஆட்சியில் இருந்தபோது தொடர்ச்சியாக இந்திரா காங்கிரஸின் தொல்லைக்கு உள்ளாகி வந்தார். தான் இந்திரா காங்கிரஸ் ஆட்சியினால் கவிழ்க்கப்படுவதைத் தவிர்க்கப்பட முடியாதது என்பதை சந்திரசேகர் திட்டவட்டமாக உணர்ந்தே வந்தார். அதேவேளை, பதவியில் இந்திரா காங்கிரசினால் அமர்த்தப்பட்டபோது நிறைவேற்றுவதாக சந்திரசேகர் ஒப்புக்கொண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டார். ஆனால் இந்திரா காங்கிரஸ் அவரை விடுவதாக இல்லை. மாறி மாறி நெருக்கடிகளைக் கொடுத்துக்கொண்டு இருந்ததோடு சந்திரசேகர் அரசாங்கம் ஒரு முழுமையான பட்ஜெட்டை சமர்ப்பிக்க இந்திரா காங்கிரஸ் அனுமதிக்கப் போவதில்லை என்பதையும், ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஆட்சியை நீடிப்பதற்கு இந்திரா காங்கிரஸ் அனுமதிக்கப் போவதில்லை என்பதை சந்திரசேகர் தெளிவாக உணர்ந்திருந்தார். ஜூனுக்குப் பிறகு ஜனதா எஸ் கட்சிக்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவு காட்டப் போவதை உறுதிப்படுத்த முடியாது என ராஜீவ்காந்தியே அறிவித்திருந்தார்.

ஜூன் மாதம் வரையுமான கால அவகாசத்தை தமக்கு ஏற்ற ஒரு அரசியல் சூழ்நிலையை உருவாக்க அல்லது ஏனைய கட்சியில் இருந்து உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்காக இந்திரா காங்கிரஸ் எடுத்துக்கொண்ட காலமாகும். ஆனால் தனது காலத்தை தெளிவாக உணர்ந்திருந்த சந்திரசேகர் அதனைப் பயன்படுத்த இந்திரா காங்கிரசுக்கு சந்தர்ப்பம் வழங்க விரும்பவில்லை. இது ஒருவகையில் சந்திரசேகரின் புத்திசாலித்தனமான நடவடிக்கையும் அவருக்குக் கிடைத்த வெற்றியும் என்றே கொள்ளுதல் வேண்டும்.

சந்திரசேகரின் இராஜினாமா இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு ஆச்சரியத்தையும், வியப்பையும் அளிக்கவும் உண்மைதான். பதவியைக் காப்பாற்ற சந்திரசேகர் மண்டியிடுவார் என எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாக முடிந்தது. இந்நெருக்கடியால் மூன்று நான்கு மாதங்களுக்குள் செய்யத் திட்டமிட்டதை ஒரு சில தினங்களில் செய்யவேண்டியது அவசியமானது. மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் பேரங்களில் ஈடுபட்டபோது அதற்கு இந்திய ஜனாதிபதி கால அவகாசம் அளித்தல் பொருட்டே இருபத்திநான்கு மணித்தியாலத்தின் அறிவிப்பாக இருந்த அறிவிப்பை எழுபத்திரெண்டு மணித்தியாலங்களின் பின் அறிவித்தார்.

எல்லாக் கட்சிகளும் தேர்தலைக் கோரி நின்றபோது ஜனாதிபதி வெங்கட்ராமன் இதை அறிவிக்காமைக்குக் காரணமும் இந்திரா காங்கிரஸ் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்வதற்கான கால அவகாசத்தை வழங்குவதற்கேயாகும். அதாவது சந்திரசேகர் வழங்க மறுத்த கால அவகாசத்தை ஜனாதிபதி வெங்கட்ராமன் வழங்கியுள்ளார் என்ன? இருந்தாலும் ஜனாதிபதி வெங்கட்ராமன் மகாபாரதம் உருவாக்கிய நாட்டில் பிறந்தவரல்லவா செஞ்சோற்றுக் கடனை அவர் எவ்வாறு மறப்பது:

# சீதனப் பிரச்சினை பெண்களுக்கு மட்டுமல்ல

கௌரி

**நோக்கம்**

இந்திய உபகண்ட நாடுகளில் தோன்றும் பெண் விடுதலை அமைப்புகளும் சீதன ஒழிப்பை தமது பிரதான வேலைத்திட்டங்களாக கொண்டுள்ளன. தமிழ் ஈழத்திலும் கூட இந்த நிலைமை காணக் கூடியதாய் உள்ளது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. சீதன ஒழிப்பு விவகாரம் பெண்களால் மட்டும் மேற்கொள்ளப்படுவதன் காரணம் என்ன? வேறு எந்த ஸ்தாபனமும் இந்தப்பிரச்சினையை ஒரு விவகாரமாக எடுத்துக்கொள்ளாதது ஏன்? பெண்களிலும் கூட சீதனம் கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்துள்ள பெண்கள் தாராளமாகவே உள்ளார்கள். மத்தியதர வர்க்கங்களைச் சேர்ந்த சீதனம் கொடுக்க முடியாத பெண்களின் பிரச்சினையாக மாத்திரமே இது கருதப்படுகின்றது. இது உண்மையா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சீதனம் என்பது என்ன?**

தனது குடும்பத்தை நடத்துவதற்கு ஒரு ஆண் பெண்வீட்டாரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் தண்டப்பணமாகவோ அல்லது தனது பெண்ணை 'கண்கலங்காமல்' பார்த்துக் கொள்வதற்கு பெண் வீட்டார் அவ் ஆணிற்கும் ஆண்வீட்டாருக்கும் வழங்கும் பரிசுத் தொகையாகவும் தான் 'சீதனம்' கருதப்படுகின்றது.

இது ஓரளவிற்கு மாத்திரமே உண்மையானதாகும். இக்கூற்று சீதனத்தைப் பற்றிய ஒரு முழுமையான பூரணத்துவமான விளக்கத்தைத் தரவில்லை ஒரு அரைகுறை உண்மையையே தருகின்றது.

சீதனத்தின் உள்ளடக்கமும் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தன்மையும் அதன் சமூக விளைவுகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. ஆகவே சீதனத்தைப் பற்றி ஒரு பொது முடிவிற்கும் வேலைத்திட்டத்திற்கும் வருவது சாத்தியமற்றதாகும். ஆகவே நாம் இங்கு தமிழ் ஈழத்தின் அதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டின் நிலைமையை அடிப்படையாக கொண்டு 'சீதனம்' என்பது பற்றிய ஆய்வைமேற்கொள்வோம். நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது என்பது மாத்திரமல்ல ஒரே நாட்டின் வெவ்வேறு வர்க்கங்களிடையேயும் இதன் உள்ளடக்கம் முற்றாக வேறுபட்டு நிற்கின்றது. இவை எவ்விதம் என்பதை நோக்குவோம்.

திருமணம் என்பது அல்லது இல்லறம் என்பது இவையே குடும்ப நிறுவனத்தை ஆக்குதல் என்பது குடும்பத் தலைவனாகவும் தலைவியாகவும் கருதப்படும் சம்பந்தப்பட்ட ஆணினதும், பெண்ணினதும் சுதந்திரமான மன இணைவைப் பொறுத்த விடயமாகும். இந்த 'இணைவு' அல்லது 'காதல்' குடும்ப அந்தஸ்து, பெண்ணின்/ஆணின் பொருளாதார நிலைமை, சாதி இத்தியாதி விழுமியங்களுக்கும் அல்லது கட்டுமானங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். அதாவது "கண்ணில்லாத காதலாக" இருக்க வேண்டும் இதுவே மனநிறைவான குடும்பமாகும். சொத்தின் அடிப்படையில் அல்லது உயர் பதவிகளின் சாதியின் அடிப்படையில் குடும்ப அந்தஸ்து என்ற ஒன்றை கட்டி வளர்த்துள்ள குடும்பங்கள், இவ்விதமான காதலை அனுமதிப்பதில்லை. இவ்விதமாக 'குடும்ப அந்தஸ்தை' கொண்டிராத குடும்பங்கள் இவ்வித காதலுக்கு தடையாக இருப்பதில்லை. ஆகவே இவ்விதமான மக்கள் மத்தியில் சீதனம் என்பது ஒருசமூகக் கொடுமையாக இருப்பதில்லை ஒரு சாதாரண பொருளாதார பிரச்சினையாகவே உள்ளது.

தத்தமது 'குடும்ப அந்தஸ்தையும்', 'குடும்ப கௌரவத்தையும்', 'குடும்ப சொத்தையும்' வளர்த்துக்கொள்வதற்கான ஒரு நடைமுறையாக திருமணத்தை கையாள்பவர்கள் மத்தியிலேயே சீதனம் என்பது பாரிய சமூக முக்கியத்துவம் பெற்ற பொருளாதார பிரச்சினையாகவுள்ளது. இன்னும் விரித்துச் சொல்வதானால் மாப்பிளை வீட்டாரும், பெண்பிளை வீட்டாரும் தத்தமது 'குடும்ப அந்தஸ்து', 'குடும்ப கௌரவம்', 'குடும்ப சொத்து', 'குடும்ப செல்வாக்கு', 'குடும்பத்தின் அரசியல் அந்தஸ்து', 'தொழிற் சாதனங்கள் அல்லது மூலதனம்' ஆகியனவற்றை தமக்குள் பகிர்ந்து கொள்ளல் அல்லது ஒரு குடும்பம் மற்றைய குடும்பத்திடம் இதை அபகரித்துக் கொள்ளல் என்பதே 'திருமணமாக' கருதப்படுகின்றது சம்பந்தப்பட்ட மணமகனினதும், மணமகளினதும் மனப்பொருத்தம், பழக்க வழக்கப் பொருத்தம் ஏன் ஜோனி-லிங்கப் பொருத்தம் கூட கணக்கில் எடுக்கப்படுவதில்லை. இவ்வித சொத்துப் பரிமாற்றத்துக்கு அல்லது அபகரிப்புக்குள்ள கௌரவமான பெயர்தான் 'சீதனமாகும்'.

இவ்வித சொத்துப் பரிமாற்றத்தில் அல்லது அபகரிப்பில் மணப்பெண்ணே இதைச் சாத்திய படுத்துவதற்கான ஊடகமாக பயன் படுத்தப்படுகிறாள். ஒருவனின் கையில் உள்ள ஒருபொருள் இன்னொருவனின் கைகளுக்கு போக வேண்டுமானால் அவன் அதற்காக பொருள் உள்ளவனுக்கு பணம் கொடுக்க வேண்டும் பணமே இங்கு பொருள்பரிமாற்றத்துக்கான ஊடகமாகச் செயற்படுகின்றது. ஆனால் பொருள் கைமாறும் போது பணம் பொருளை வைத்திருந்தவனின் கைகளைச் சென்றடைகின்றது. ஆனால் சீதனம் எனப்படும் வர்த்தகத்திலோ பெண்வீட்டார் பெண்ணையும் கொடுத்து சொத்தையும் கொடுத்து சொத்துபரிமாற்றம் செய்து கொள்கிறார்கள்.

பெண்வீட்டார் பணமும் உயர்சாதி அந்தஸ்தும் மட்டும் உள்ளவர்களாய் இருந்து மாப்பிள்ளை பணம் இல்லாதவர்களாகவும் ஆனால் உத்தியோக அந்தஸ்துள்ளவர்களாகவும் இருந்தால் பெண் வீட்டார் சீதனமும் கொடுத்து, மணமகனின் குடும்பத்திற்கு சன்மானமும் கொடுத்து மணமகனை தமது குடும்பத்துடன் இணைத்துக் கொள்கிறார்கள். தமது குடும்பத்தின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்கிறார்கள். மணமகனின் குடும்ப செல்வாக்கை அபகரித்துக் கொள்கிறார்கள். இந்த வர்த்தகத்திற்கு உள்ளாக்கப்படும் பொருள் மணமகனின் சமூக அந்தஸ்து. வாங்குவோர் பெண்வீட்டார், விற்பவர் மணமகனின் குடும்பத்தினர். இவ்வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்படும் ஊடகம் மணப்பெண்ணும் பெண்ணிற்கு கொடுக்கப்படும் சீதனமுமாகும். மணமகனை அபகரித்த பெண்வீட்டார் மேலும் வளர்ச்சி பெறுகிறார்கள். தமது குடும்ப அந்தஸ்தை உயர்த்தக் கூடிய ஒரு மகனை உருவாக்கிய மாப்பிள்ளை வீட்டார் தமது ஆசைகள் நிராசையாகிவிட்டதால் மனம் வெதும்பி வாழ்கின்றனர். இவ்விதமான மணமகன் அபகரிப்பு திருமணங்களே யாழ்ப்பாணத்தில் அதிகமாகவுள்ளதை நன்றாக அவதானிக்கலாம். பணப்பயிர்ச்செய்கை மூலமோ, உணவுப் பொருள் வர்த்தகத்தின் மூலமோ பணக்காரராகிய குடும்பங்கள் கல்வியின் மூலமோ, அரசியற் செல்வாக்கின் மூலமோ வர்க்க மேல் நிலையாக்கம் பெற்ற ஆண்களை தமதாக்கி கொள்வதே யாழ்ப்பாணத்தில் வழமையாகியுள்ளது.

மணமகன் குடும்பம் பணச் செல்வமும், அரசியற் செல்வாக்கும், கல்விச் செல்வமும், சமூகச் செல்வாக்கும் ஒருங்கே நிறைந்ததாய் இருந்து மணமகள் குடும்பம் பணச் செல்வம் மாத்திரம் நிறைந்ததாய் இருந்தால் நிலைமை வேறுவிதமானது. இங்கு பெண் வீட்டாரின் பணச்செல்வம் மணமகன் வீட்டாரால் அபகரிக்கப்படுகின்றது இழப்பது பெண் வீட்டார் பெறுவது மாப்பிள்ளை வீட்டார். இப்பரிமாற்றத்துக்கான ஊடகம் மணப்பெண். மூத்த பெண்ணுடனேயே தமது சொத்தின் பெரும்பகுதியை இழந்த பெண்வீட்டார் வர்க்கநிலையில் கீழ் இறங்கி மனம் வெதும்பி, ஏனைய பெண் பிள்ளைகளை எவ்விதம் கரையேற்றுவது என்று ஏங்கித் தவிக்க சொத்துடன் சொத்துச் சேர்த்த மாப்பிள்ளை வீட்டார் களிப்பில் குதிக்கின்றனர். சிற்சில சந்தர்ப்பங்களில் பெரிய இடத்துச் சம்பந்தம் என்பது பெண் வீட்டாரின் சமூக அந்தஸ்தை உயர்த்தி அவர்களின் வர்க்க நிலையையும் மேலோங்கச் செய்து விடுகிறது.

> சீதனம் இல்லாது பெண்கள் வாழா வெட்டியாக உள்ளார்கள் என்பதற்கான காரணம் என்ன? பெண் வீட்டார் தமது குடும்பத்திலும் வீட அனைத்து வழியிலும் சமூக அந்தஸ்து குறைந்த குடும்பத்துடன் பெண் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ள தயங்குகிறார்கள் என்பதேயாகும்.

(தொடரும்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பொருட்கள் விலை நிர்ணயம் சம்பந்தமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# குழப்பமான சூழ்நிலையில் இன்றுகூடும் இந்தியபாராளுமன்றம்

நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் இன்று காலை கூடுகின்றன. பிரதம மந்திரி சந்திரசேகர் பதவி விலகியதைத் தொடர்ந்து எழுந்துள்ள பிரச்சினைக்கு எந்த விதத்தில் தீர்வு கிடைக்கும் என்று ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமனினால் ஒன்றும் அறிவிக்கப்படாத நிலையில் இன்று லோக்சபாவும், ராஜ்ய சபாவும் கூடுகின்றன.

1991 - 1992 ஆம் ஆண்டு வரை முதல் நான்கு மாதங்களுக்குத் தேவையான முன்பணக் கோரிக்கையையும் நான்கு மாநிலங்களினதும் மற்றும் ஒரு யூனிற் பிரதேசங்களினதும் வரவு - செலவுத் திட்டங்களை லோக் சபை நிறைவேற்றவேண்டியுள்ளது. மேலும் பஞ்சாப் மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சியை நீடிக்கவகைசெய்யும் அரசியற் சட்ட திருத்தமசோதாவையும் லோக்சபை ஏற்கவேண்டியுள்ளது. ரயில்வே வரவு - செலவுத் திட்டமும் காத்திருக்கிறது.

நாடாளுமன்றம் காலையில் கூடுவதற்கு முன் தேசிய முன்னணித் தலைவர்களும், இடதுசாரித் தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசனை கலக்கிறார்கள். அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து இவர்கள் முடிவொன்றை எடுப்பார்கள். உடனடித் தேர்தல் நடத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்று இத்தக்கட்சிகள் கருதுகின்றன.

நாடாளுமன்றத்தின் முன் உள்ள முன்பணக் கோரிக்கை, ரயில்வே வரவு - செலவுத் திட்டம், மாநிலங்களின் வரவு-செலவுத்திட்டம்ஆகியவற்றை நிறைவேற்றச் செய்வதிலேயே ராஷ்டிரபதியின் முக்கிய கவனம் இருந்திருக்கிறது. ஆதலால் லோக்சபையைக் கலைக்கும் விடயத்தில் அவரால் எந்தவித உடனடி முடிவுக்கும் வரமுடியவில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் இந்திர ஜித் குப்தா நேற்றுக் கூறியிருக்கிறார்.

ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன் லோக்சபையைக் கலைத்து உடனடியாகத் தேர்தலை நடத்தாவிட்டால் நாடுதழுவிய எதிர்ப்பியக்கம் ஒன்றை நடத்தவும் இடதுசாரிக்கட்சிகளும், தேசிய முன்னணியும் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று டெல்லியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேசிய முன்னணித் தலைவர் ராமராவ்

## லோக்சபாவைகலைத்துதேர்தல் உடன் நடத்தக் கோரிக்கை

லோக்சபையைக் கலைத்து உடனடியாக தேர்தல் நடத்த அழைப்பு விடுமாறு தேசிய முன்னணித்தலைவர் என். டி. ராமராவ் ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமனை வற்புறுத்தி உள்ளார்.

நேற்றுக் ஹைதராபாத்தில் தெலுங்கு தேசக் கட்சியின் நிர்வாகக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளரிடம் பேசிய ராமராவ்,தேர்தல்விடயத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் அபாயகரமான விளையாட்டுப் பற்றியும், சோஷலிஸ்ட் ஜனதாதள் கட்சியின் தனிப் பட்டஉறுப்பினர்கள் தங்களது நிலையை மாற்றுவது பற்றித் தாம் வருத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

### திறப்புவிழா

(செ. த. மை)

மட்டுவில் வடக்கு மாவீரர் ஜே. திரவி சனசமூக நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

திரு. நி. அன்ரனி தேவதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இத் திறப்பு விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர்.

### மூதாட்டி மரணம்

(கொழும்புத்துறை)

இரவு நேரத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளிவரச் சென்ற 52 வயது மூதாட்டி கிணற்றில் விழுந்து பலியான சம்பவம் அண்மையில் சாவகச்சேரியில் நிகழ்ந்துள்ளது. சாவகச்சேரி கோயில் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த திரு எஸ். அலோசியஸ் மனைவி மேரியம்மா என்பவரே இரவு 8 மணிக்கு தண்ணீர் அள்ளிவரச் சென்ற சமயம் தவறி விழுந்து பலியானவராவார். (24)

கண்

நம்பர்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. அவற்றில் கூடுதலான நம்பர்கள் அங்குகடமையாற்றும் ஊழியர்களுக்கே வழங்கப்படுவதால்அதிகாலை மூன்று மணிக்கு வந்து காத்திருக்கும் பொதுமக்களுக்குக் கிடைப்பது மிகமிகக் குறைவாக இருக்கிறது.

வைத்தியசாலையில் வேலை செய்யும் ஊழியர்கள் பலர் வார்ட்டுகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை நம்பர் பெறுவதற்காகப் பயன்படுத்திவருவதாகவும் தெரிய வருகின்றது. (24)

திரியாயில்

- ★ ரி- 56 பட்மொடல் துப்பாக்கி 1
- ★ ரவைக்கூடுகள் 8
- ★ ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கி 1
- ★ றம் மகஸின் 5
- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைக் கோர்வை 500
- ★ கைக்குண்டு 1
- ★ நடுத்தர ரவைகள் 890
- ★ குண்டு துளைக்காத அங்கிகள் 3

### பஸ் விபத்தில் 50 பேர் பலி

(சிறிநகர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தில் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிர் இழந்துள்ளனர்.

பள்ளத்தாக்கு ஒன்றில் பிரயாணிகள் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று விழுந்ததாகவும் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் மேலும் பலர் காயமடைந்திருப்பதாகவும் யூ. என். ஐ செய்தித்தாபனம் தெரிவித்தது.

ரஞ்சனின்

வேண்டிய உடன் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களைப்பணித்துள்ளது. இதன் ஓர் அங்கமாக சகல அரசாங்க ஊழியர்களையும் ஏப்பிரல் முதலாந் திகதி கடமைக்குத் திரும்புமாறு பணிக்கப்பட்டுள்ளது. கடமைக்குத் திரும்பாதவர்கள் வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

சம்பள

கொள்ளப்படவுள்ளது. தற்போது தற்காலிக நியமனம் பெற்றிருக்கும் 35, 000 ஆசிரியர்களின் பயிற்சிக் காலம்வந்ததும் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டமேற்படிப்பைத்தொடருவதற்கும் சந்தர்ப்பம் வழங்க அமைச்சு முடிவெடுத்துள்ளது.

காவல்அரண்

யளவில் அதேஇடத்துக்குகாவலரண் அமைப்பதற்கு வந்த இராணுவத்தினர் மீது புலிகள் கிளைப்பார்த் தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குதல்களால் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நான்கு

- ★ ரி 56 ரக துப்பாக்கி பட்மொடல் - 1
  - ரி 56-2 ரக துப்பாக்கி - 4
  - ரவைக் கூடுகள் - 15
  - ஏ. கே. எல். எம். ஜி. றம்மகசின் - 04
  - ரவைகள் (நடுத்தரம்) - 500

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ செல்லையாக்குருக்கள் சதாசிவக்குருக்கள்

(யாழ். நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கோயில் பரிபாலகரும், பிரதமகுருவும்)

நாயன்மார்கட்டு சிவஸ்ரீ செ. சதாசிவக்குருக்கள் அவர்கள் 10 - 03 - 91 இல் காலமாகிவிட்டார். இவர் கனகாம்பிகையின் அன்புக் கணவரும். தனலட்சுமி, காலஞ்சென்ற ஆறுமுகக் குருக்கள், மகேஸ்வரக்குருக்கள், மகாலிங்கசிவக்குருக்கள் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதியின் வளர்ப்புத் தந்தையும், முத்துச்சாமிஐயர், பத்மாவதி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுசூயா, சசிதரன், மேனகா, காயத்திரி, கோகுலன், சங்கரி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் வெய்யிலுகந்த விநாயகர் கோயில் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து இன்று 11-03-91 திங்கள் காலை 8 மணிக்கு ஈமக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

18, வெய்யிலுகந்த
விநாயகர் வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்:
ச. மகேஸ்வரக்குருக்கள்.
ச. மகாலிங்கசிவக்குருக்கள்.

(R-1172)

# தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்றுகாங்கிரஸ்வெளியிடும்

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் இன்று அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவுள்ளது. அதேவேளை எதிர்வரும் 1ஆம் திகதிக்கும், 25ஆம் திகதிக்குமிடையில் வேட்பாளர் பட்டியலும் தயாரிக்கப்படும் இத் தகவலை நேற்று செய்தியாளரிடம் இந்திரா காங்கிரசின் செயலர் எச். கே. பகத் தெரிவித்தார். உடனடியாக இடைக்காலத் தேர்தலை நடத்தும்படியும் மூத்த காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கோர்பசேவின் புதிய சமஷ்டி; ரஷ்ய சமஷ்டி தலைவர் எதிர்ப்பு

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கோர்பசேவ் கொண்டுவந்திருக்கும் புதிய யூனியன் ஒப்பந்தத்திற்கு ரஷ்ய சமஷ்டி அரசாங்கத்தின் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தில் பல அம்சங்கள் குறித்து உடன்பாடு ஏற்படவில்லை என்றும் ஆதலால் இதனை ஏற்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். சோவியத் யூனியனின் மிகப் பெரும் குடியரசு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புதிய யூனியன் ஒப்பந்தம் சோவியத் யூனியனில் பிரிவு ஏற்படுவதை தடுப்பதற்காக வகுக்கப்பட்டிருக்கிறது.

# பணம் அனுப்பப்படாததால் நிவாரணம் வழங்குவதில் சிரமம்

(வவுனியா)

அரசாங்கத்தினால் பணம் அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் வன்செயலில் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கு நிவாரணப் பணம் வழங்க முடியாத நிலையில் வவுனியா அரச அதிகாரிகள் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 89 ஆம் ஆண்டிலும், அதற்கு மூந்திய வருடங்களிலும் பாதிப்படைந்த தமிழ் மக்கள் தமது நிவாரணப் பணத்தைப் பெறும் நோக்குடன் வவுனியா கச்சேரிக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர்.

சில கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு கடந்த காலத்தில் இந்தப் பணம் வழங்கப்பட்டபோதிலும் பல கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவு பகுதியில் உள்ள பல மக்களுக்கு கடந்த மாதங்களுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

### கொழும்புத்துறையில் தமிழ்த்தின விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா நாளை காலை9:30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில்திரு. இரா. சுந்தரலிங்கம் வட மாநில கல்விப் பணிப்பாளர் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார்.

கௌரவ விருந்தினராக கலாநிதிப் பட்டம் பெற்ற திரு. க. கனகராசா (ச. நீ.)வும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (24)

## மரண அறிவித்தல்



### எலியாஸ் - அருளானந்தம்

(பொன்னுத்துரை)

(உரிமையாளர், அருள்ஸ் வெல்டிங் வேக்ஸ் கொழும்புத்துறை மத்தி)

தோற்றம்: 12-05-1925 | மறைவு: 21-02-1991

இவர் காஞ்சிபுரத்தில் 21 - 02 - 1991இல் இறைவனடி எய்தியுள்ளார்.

இவரது ஆத்மசாந்திக்காக புனித செபமாலை அன்னையைப் பிரார்த்திக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றனர்.

தகவல் : பி. வி. ஜெயரத்தினம்

16, சென். மேரிஸ் இரண்டாம் ஒழுங்கை,
ஆனந்தன்வடலி வீதி,
கொழும்புத்துறை.

(R/1173)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.